கவிதைப்பேழை

இயல் ஒன்று

# தேயிலைத் தோட்டப் பாட்டு




19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகத் தமிழர்கள் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளுக்குப் பிழைக்கச் சென்றனர். அங்குக் கரும்புத் தோட்டத் தொழிலாளர்களாகவும் தேயிலைத் தோட்டக் கூலிகளாகவும் துன்புற்றனர். அவர்களது துன்பத்திற்குக் காரணம் என்ன என்பதையும் அதிலிருந்து விடுபடுவதற்கான வழியையும் கூறும் கவிதை ஒன்றை அறிவோம் வாருங்கள்!

நாகரீ கத்திலும் ராஜரீ கத்திலும்
நாடெங்கும் எந்நாளும் கொண்டாடிட – அருஞ்
சேகரம் போலச் சிறந்து விளங்கிடும்
செல்வம் மலிந்த திருநாடு

இத்தகைச் சீரும் சிறப்பும் கொண்டநமது
இந்திய தேசத்தில் அன்னியர்கள்– நடு
மத்தியில் வந்துகுடி புகுந்து வரு
மானம் கொடுத்து ரட்சித்து வரும்

கைத்தொழில் யாவையும் கொஞ்சம் கொஞ்சமாகக்
காத்திருந்து சமயம் பார்த்து –உள்ள
அத்தனையும் கொள்ளை யிட்டுக் கொண்டுநம்மை
அற்பப் பிராணி போல் செய்ததினால்

உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்
உற்ற பலவித வேலை செய்து – நாம்
பெண்டு பிள்ளையுடன் கஷ்டப் பட்டுத்தினம்
பேயினும் நாயினும் கீழாகினம்

ஒன்றுக்குப் பத்துநூறா யிரமாகவே
ஒவ்வொரு கூலி ஜனங்கள்மீதும்–மிகத்
தண்டு முண்டுமாய்க் கணக்கு எழுதி அவர்
சாகும் வரைக்குந் தலைச் சுமையாய்

பற்றுவரவு குறிப்புப் பேரேட்டினில்
பாக்கி இருக்கும்படி எழுதி–அவர்
சற்றும் தயவும் இல்லாமலே கூலி
ஜனங்களைக் கப்பலிலே ஏற்றி



அக்கரை தேசத்தின் லங்கைத் தீவுக்குள்ளே
அந்தமான் தீவு போன்ற இடத்தில் –மிகச்
சிக்கன மாகவே வெள்ளையர் தங்களின்
தேயிலைத் தோட்டத்தில் சேர்த்திடுவார்

உண்ண உணவுக்கும் உள்ள செலவுக்கும்
ஒவ்வொரு நாளும் அரிதாகி–சிறு
மண்ணுளிப் பாம்புபோல் பெண்டு பிள்ளையுடன்
வாழ்ந்து வருவதைக் காணீரோ!

இப்படிச் சென்று அந்தத் தேயிலைத் தோட்டத்தில்
இந்தியர் துன்பப் படுவதற்கு–மனது
ஒப்பிய கல்வியொழுக்கம் நாகரீகம்
ஒன்றேனும் இல்லாக் குறையெனவே

இன்றேனும் கண்டு உங்கள் பிள்ளைகளுக்கெல்லாம்
ஏற்றமுள்ள கல்வியைப் புகட்டி–நீங்கள்
ஒன்றும் குறையில்லா ஒற்றுமையாகவே
ஊரில் கட்டுப்பாடு செய்குவீரே!

– முகம்மது இராவுத்தர்



7th Std - Tamil_2025_Term_II_Unit 1.indd 4 6/6/2025 12:28:53 PM